செ.வெ.எண்: 309/2024 நாள்: 07.06.2024

# தேசிய அளவில் பதக்கம் வென்ற குத்துச்சண்டை வீரர், வீராங்கனைகள் பயிற்சியாளராக பயிற்சி வழங்கிட விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

தேசிய அளவில் பதக்கம் வென்ற குத்துச்சண்டை வீரர், வீராங்கனைகள் பயிற்சியாளராக பயிற்சி வழங்கிட விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் "விளையாடு இந்தியா" (Khelo India) திட்ட நிதியுதவியில் துவக்கநிலை குத்துச்சண்டை பயிற்சிக்கான "SDAT- விளையாடு இந்தியா மாவட்ட மையம்" சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் அமைக்கப்பட உள்ளது. இம்மையத்தில் 30-100 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு தினசரி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்த மையத்தில் பயிற்சியாளராக பயிற்சி வழங்கிட, தேசிய அளவில் சாதனைபடைத்த 40 வயதுக்குட்பட்ட குத்துச்சண்டை வீரர், வீராங்கனை ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். சர்வதேச போட்டிகள் அல்லது தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றவராகவோ அல்லது அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பதக்கம் வென்றவராகவோ, சர்வதேசப் போட்டிகள் மற்றும் சீனியர் தேசிய போட்டிகளில் கலந்து கொண்டவராகவோ இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளருக்கு 11 மாதங்களுக்கு மாதாந்திர பயிற்சிக் கட்டணமாக ரூ.25,000/- வழங்கப்படும். இது நிரந்தரப்பணி அல்ல. முற்றிலும் தற்காலிகமானதாகும். இதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு சலுகைளோ நிரந்தரப் பணியோ கோர இயலாது. இதற்குரிய விண்ணப்பத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சேலம் மாவட்டப் பிரிவு மகாத்மா

காந்தி விளையாட்டரங்க அலுவலகத்தில் இலவசமாக 10.06.2024 முதல் 18.06.2024 மாலை 5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தபாலிலோ அல்லது நேரிலோ 19.06.2024 மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்டுள்ள தேதிக்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது, தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு சேலம் மகாத்மா காந்தி மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடைபெறும். உடற்தகுதி, விளையாட்டுத்திறன், பெற்ற பதக்கங்கள், பயிற்சி வழங்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு நடைபெறும். தேர்வு தேதி மற்றும் விவரங்கள் பின்னர் வெளியிடப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு** : செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

IPROSalem PRO Salem pro.slm PRO Salem